ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2025 ஏப்பிறல் 04 |

**பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமத்தின் இலங்கைக்கான உயர்மட்ட விஜயம் - பரஸ்பர மதிப்பீட்டு தயாரிப்பு விளக்கவுரை**

பணம் தூயதாக்குதல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமத்தின் உயர்மட்ட தூதுக்குழு, 2026 மாச்சில் தொடங்குவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இலங்கையின் கட்டமைப்பு தொடர்பில் வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டிற்கான இன்றியமையாத ஆலோசனைகளையும் உத்திகளையும் வழங்குவதற்காக 2025 மாச்சு 10 – 12 காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. தூதுக்குழுவானது இம்முக்கிய மதிப்பீட்டிற்கான இலங்கையின் தயார்நிலை பற்றி ஆராய்வதற்காக உள்நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. பன்னாட்டு தூதுக்குழு பின்வருவோரை உள்ளடக்கியிருக்கிறது.

1. திரு. மித்ருரோஷி கஜிகாவா – ஆசிய பசுபிக் குழும இணைத் தலைவர், பன்னாட்டு அலுவல்களுக்கான நிதி துணை உதவி அமைச்சர், யப்பானிய நிதி அமைச்சு
2. செல்வி. மிட்டாளி தியாகி – பதில் துணை நிறைவேற்றுச் செயலாளர், ஆசிய பசுபிக் குழுமச் செயலகம்
3. திரு. தகிகாகிறோ யமாசாகி – பணிப்பாளர் சட்டத்திற்குமாறான நிதியியல் பாய்ச்சல்களைத் தடுப்பதற்கான அலுவலகம், பன்னாட்டு பணியம், நிதியமைச்சு, யப்பான்

ஆகிய பசுபிக் குழுமம் என்பது நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் கீழ் தொழிற்படுகின்ற பிராந்திய சபைகளிலொன்றாக இருப்பதுடன் பணம் தூயதாக்கலையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலையும், பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதங்களுடன் தொடர்பான ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலையும் ஒழிப்பதற்கு உறுப்பினர் நியாயாதிக்கங்கள் பன்னாட்டு நியமங்களை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துகிறது. அனைத்து நாடுகளும் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் 40 விதந்துரைப்புக்களுக்கும் இணங்கியொழுகுமாறும், 11 உடனடிப் பெறுபேறுகளிடையேயான அவற்றின் காத்திரமான தன்மையினை எடுத்து விளங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதன் மூலம் நிதியியல் குற்றங்களை தணிப்பதற்கும் நிதியியல் ஒருங்கிணைப்புக்களை வலுப்படுத்துவதற்குமான உலகளாவிய முயற்சிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன்படி இலங்கையின் 3 ஆவது பரஸ்பர மதிப்பீடு 2026 மாச்சில் தொடங்குவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. தற்பொழுது 24 பொது ஆர்வலர்கள், நிதியியல் நிறுவனங்கள், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் ஆகியோர் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு மையப் புள்ளியாக விளங்கி முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகிறது.

விஜயத்தின் போது, ஆசிய பசுபிக் குழுமத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழு இலங்கையின் முன்னேற்றம், சவால்கள் மற்றும் மதிப்பீட்டின் முன்னாலுள்ள உபாய முன்னுரிமைகள் என்பன பற்றி ஆராய்வதற்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய இணைப்புக் குழு தலைவராகவும் பணியாற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரைச் சந்தித்தது. தூதுக்குழு வரவிருக்கின்ற மதிப்பீடுகளுக்கான தயாரிப்பதில் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முயற்சிகளுக்கு மேலும் வழிகாட்டுவதற்கும் வலுப்படுத்துவதற்குமாக ஒரு சில அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய தொடர்பான தரப்பினர்களுடனும் கூட்டத்தினை நடத்தியது.